1987 நவம்பர் 10]

## மத்தாளப்பள்ளம் அணை கட்டும் திட்டம்.

26—(*வினா எண் 9628) திரு. எச். ஜி. ஆறுமுகம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெருப்பூர் அருகே மத்தாளபள்ளம் அணை கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டத்தில் பெண்ணாகரம் வட்டத்தில் நெருப்பூர் அருகே மத்தாளபள்ளம் அணைக்கட்டும் திட்டம் முதல் அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

திரு. எச். ஜி. ஆறுமுகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது இத்திட்டத்திற்கு அதிகாரிகளால் சர்வே நடத்தப்பட்டு வருகிறது என்று சொன்னார்கள். சுமார் ஐந்து, ஆறு ஆண்டுகளாக அதிகாரிகளால் சர்வே நடத்தப்பட்டும் இன்னும் அந்தத் திட்டம் துவங்கப்படாமல் இருக்கிறது. பெண்ணாகரம் வட்டம் மிகவும் பின்தங்கிய வட்டமாகும். அந்தப் பகுதியிலே இந்த மத்தாளபள்ளம் அணை கட்டுவதற்கு விரைவான நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமசந்திரன்: தலைவர் அவர்களே, ஆய்வு செய்யும் என்று சொல்கிற நேரத்தில் மூன்று ஆண்டுகளுக்குத் தண்ணீர் வரத்து எவ்வளவு வருகிறது என்பதையெல்லாம் சரிபார்த்துத்தான் அதற்கு முடிவு செய்ய வேண்டியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் உணர்வை நாங்கள் புரிந்து கொண்டிருக்கிறோம். விரைவாக ஆய்வுப் பணிகளை முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## வைகை அணையின் கொள்ளளவை அதிகரித்தல்.

27—(*வினா எண் 11068) திரு. கே. உச்சி: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வைகை அணையின் தற்போதைய கொள்ளளவு எவ்வளவு?

[1987 நவம்பர் 10

(ஆ) அந்த அணையை அகலப்படுத்தியும், ஆழப்படுத்தியும் அதன் கொள்ளளவு அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, (அ) வைகை அணையின் கொள்ளளவு 6827 மில்லியன் கன அடிகளாகும்.

(ஆ) வைகை அணையின் நீர் வரத்தைக் கணக்கில் கொள்ளும்போது, அதன் கொள்ளளவை அதிகரிக்க வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.

**திரு. கே. உச்சி :** தலைவர் அவர்களே, அதனுடைய கொள்ளளவிற்குத் தகுந்த ஆழம் இருக்கிறது. எனவே மேலும் ஆழப்படுத்த வேண்டிய அவசியம் இல்லையென்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். பெரியோர்கள் சொல்வதைப் போல வைகை என்ற அளவிற்குத்தான் அதில் தண்ணீர் ஓடுகிறதா? அதனை அதிகரிக்கும் திட்டம் ஏதாவது உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, வை கை இல்லை. இப்போது வைகையாகத்தான் தண்ணீர் இருந்து கொண்டிருக்கிறது. அதனுடைய கொள்ளளவை முதலில் பார்க்கிறபோது 6,878 மிலியன் கன அடியாக இருக்க வேண்டுமென்று அப்போது கட்டியிருக்கிறார்கள். இப்போது அதனுடைய கொள்ளளவு 6,827 மிலியன் கன அடி. ஏறத்தாழ 50 மிலியன் கன அடி தான் அங்கே சில்ட் இருக்கிற காரணத்தால் அதை ஆழப்படுத்த வேண்டிய அவசியம் தற்போது இல்லை.

**திரு. பொன். முத்துராமலிங்கம்:** தலைவர் அவர்களே, பெரியாறு, வைகை ஆயக்கட்டுப் பகுதிகளுக்கு விவசாயத்திற்குத் தண்ணீர் திறந்துவிடும் நிலையில் மேலூர் பகுதி மட்டும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மேலூர் பகுதி மக்கள் மகிழ்ச்சியடையத்தக்க அடிப்படையில் இன்றைக்கு அணைக்கட்டு நீர்ப்பிடிப்புப் பகுதிகளிலும், ஆயக்கட்டுப் பகுதிகளிலும் மழை பெய்து கொண்டிருக்கிற காரணத்தால் மேலூர் பகுதிக்கும் விவசாயத்திற்கும் தண்ணீர் திறந்து விடுகிற முயற்சியை அரசு உடனே மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

1987 நவம்பர் 10]

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இருக்கிற நீரை வைத்துக்கொண்டு கள்ளத் திரி வரைக்கும், அந்த அணைக்கட்டுப் பகுதி வரைக்கும் தண்ணீரைத் திறந்து விடுவதற்கு—இப்போது நாங்கள் 5-11-1987 ஆம் தேதியன்று தண்ணீரைத் திறந்து விட்டிருக் கிறோம். இப்போது அங்கே பெய்கிற மழையை நாங்கள் சரி பார்த்துக் கொண்டிருக்கிறோம். நீரின் வரத்து கொஞ்சம் கூடிய வுடனே தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும். அனைத்துக் கட்சி களின் சார்பாகவும் இதற்குக் கோரிக்கை விட்டிருக்கிறார்கள்.

திரு. வே. இரா. ஜெயராமன் : தலைவர் அவர்களே, வைகை ஆறு உற்பத்தியாகிற வாசநாட்டுப் பகுதிகளில் மழைக் காலங் களில் ஏற்படுகிற வெள்ளச் சேதங்கள் அதிகமாக இருக்கிறதால், நடந்த வெள்ள காலத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர் கள் தொகுதியான ஆண்டிப்பட்டியில் மேலவைகை என்று ஒரு அணைக்கட்டுத் திட்டம் 40 கோடி ரூபாய் செலவில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. வெள்ள நீரைத் தேக்குகிற இந்தத் திட்டத்திற்கு அரசு விரைவாக அனுமதியளிக்குமா என்று அமைச்சர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அந்தத் திட்டம் அரசினுடைய பரிசீல னைக்குப்பின் கைவிடப்பட்டது.

LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வீரசோழன் ஆற்றின் குறுக்கே கண்டமடை வாய்க்கால் தலைப்பில் படுக்கை அணை கட்டுதல்.

28—(*வினா எண். 12293) திரு. பாப்பா சுப்பிரமணியன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினா வுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், குத்தாலம் தொகுதி, குத்தாலம் ஒன்றி யம், மங்கநல்லூர் அருகே வீரசோழன் ஆற்றின் குறுக்கே கண்டமடை வாய்க்கால் தலைப்பில் ஒரு பெட்டாம் அமைத்துத் தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?